05.10.2016

# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நெல் பயிரில் இலை சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்துவது எப்படி? விவசாயிகளுக்கு வேளாண் துறை ஆலோசனை



மாவட்டத்தில் சம்பா பருவத்தில் நடவு செய்யப்பட்டுள்ள நெல் பயிரில் இலை சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்துவது எப்படி என்பது குறித்து விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர், ஆரணி, மேற்கு ஆரணி, கலசப்பாக்கம் வட்டங்களில் தற்போதைய சம்பா பருவத்தில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நெல் வயல்களில் கருப்பு கதிர் நாவாய் பூச்சி, இலை சுருட்டுப் புழு, துத்தநாக பற்றாக்குறை பரவலாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்து திருவண்ணாமலை, அத்தியந்தல் பகுதியில் உள்ள சிறுதானிய மகத்துவ மையத்தின் பேராசிரியரும், தலைவருமான ப.பரசுராமன் கூறியது:

கருப்பு கதிர் நாவாய்ப் பூச்சிகள் நீர் மட்டத்துக்கு மேலே இருக்கும் பயிரின் அடிப்பகுதியில் காணப்படும். தாக்கப்பட்ட பயிர்கள் முற்றிலும் காய்ந்து, பழுப்பு நிறத்தில் இருக்கும். இந்தப் பூச்சிகளின் தாக்கம் மாலை நேரங்களில் செடியின் மேற்பரப்பில் காணப்படும். இதை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 250 கிராம் அசிபேட் அல்லது ஏக்கருக்கு இம்மிடாகுளோபிரிட் 60 மில்லி லிட்டர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் 2 முறை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இலை சுருட்டுப்புழு: இந்த வகையான பூச்சிகள் தாக்கப்பட்ட இலைகள், நீள் வாக்கில் மடிக்கப்பட்டு அந்த மடிப்புக்குள் புழுக்கள் காணப்படும். இலைகளின் பச்சைநிற திசுக்களை புழுக்கள் சுரண்டுவதால், இலைகள் வெண்மையாக மாறி, பின்னர் காய்ந்துவிடும். இந்த பூச்சிகளை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 60 மில்லி குளோர்அன்ட்ரனிலிபுரோல் அல்லது ஏக்கருக்கு 20 மில்லி புளுபென்டியமைடு மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் 2 முறை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

துத்தநாக பற்றாக்குறை: முறையான பராமரிப்பு இல்லாத நெல் வயல்களில் பாசி படர்ந்து, மண்ணின் மேற்பரப்பு கடினமாக இருக்கும்.

இலை நடுநரம்பின் இருபுறமும் பட்டையான மஞ்சள் நிற கோடுகள் காணப்படும். இந்த பற்றாக்குறை இருந்தால் நெல் மணிகள் பிடிப்பதில் தாமதம் ஏற்படும். நெல் பயிரின் வளர்ச்சி குன்றி காணப்படும். இதை நிவர்த்தி செய்ய பாசி படர்ந்த வயல்களில் ஏக்கருக்கு 3 கிலோ காப்பர் சல்பேட் என்ற அளவில் 25 கிலோ மணலுடன் கலந்து தெளிக்க வேண்டும்.

இதன் பிறகு நீரை வடித்து விட்டு, துத்தநாக கலவையை ஏக்கருக்கு 200 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்கலாம் என்றார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### குலை நோய் தாக்குகலில் தப்பிக்க நெல்லூர் ரகம்: டீலக்சு-க்கு விடை கொடுத்த வேளாண்துறை

காரைக்குடி, கடந்த ஆண்டு சாக்கோட்டையில் டீலக்ஸ் ரகத்தில் குலை நோய் தாக்குதல் ஏற்பட்டதை தொடர்ந்து, இந்த ஆண்டு டீலக்ஸ் விதைகளுக்கு வேளாண்துறையினர் விடை கொடுத்து என்.என்.எல்.ஆர்., (நெல்லூார்) ரகத்தை பரிந்துரை செய்துள்ளனர்.

கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பரில் மேகமூட்டமுள்ள வானம், தொடர் மழை மற்றும் குாறலால் ஏற்பட்ட சீதோஷ்ண நிலை காரணமாக குஞ்சை மாவட்டக்கின் நெற்பயிர்களில் குலை நோய் தாக்குதல் ஏற்பட்டது. அந்த நோய் மெல்ல மெல்ல பரவி, புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்ட பகுதிகளிலும் பரவியது. சாக்கோட்டை அருகே உள்ள பெரியகோட்டை, களத்தூர், நாட்டுச்சேரி குரூப்களில் உள்ள செங்கரை, தட்டாகுடி, பீர்க்கலைக்காடு, அமனாபட்டி, பொய்யாவயல், ஸ்ரீரங்கபுரம், மேலசெட்டிவயல் உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் நெற்பயிர்கள் குலை நோயால் பாதிக்கப்பட்டன.

குலை நோய் தாக்குதலால், இலைகளில் சாம்பல் நிற மைய பகுதியுடன் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண் வடிவ புள்ளிகள் காணப்பட்டது. தீவிர நோய் தாக்குதலுக்கு உள்ளான பயிர் முழுவதும் எரிந்தது போல் தோற்றமளித்தது. கதிர் பருவ நிலைக்கு முன்பே கழுத்து பகுதியில் குலை நோய் தாக்கியதால் மகசூல் முற்றிலும் முடங்கியது.

வேளாண் துறை சார்பில் குலை நோய் தாக்குதலுக்கு உரிய டிரைசைக்ளோசோல் உள்ளிட்ட பல்வேறு மருந்து பரிந்துரைக்கப்பட்டாலும், நெற்பயிர்களை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் தவித்தனர்.

இதற்கு காரணம் 10 ஆண்டுக்கு முந்தைய ரகமான டீலக்ஸ் பொன்னி என்று அழைக்கப்படும் பி.பி.டி. 5204 நெல் ரகத்தை விவசாயிகள் தொடர்ந்து பயிரிட்டு வந்ததால், அதன் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து போனது எனவும் கூறப்பட்டது.

இதனால், இந்த ஆண்டு, வேளாண் துறை சார்பில் டீலக்ஸ் பயிரிடுவதை விவசாயிகள் தவிர்க்க வழிமுறைகள் எடுத்துரைக்கப்பட்டது. டீலக்சு-க்கு பதிலாக என்.எல்.ஆர்., கோ-ஆர்.51, கோ-ஆர் 49, கோ-ஆர் 50- ரகங்களை பயிரிட வேண்டுகோள் விடுக்கப்பட்டது. என்.எல்.ஆர்., எனப்படும் நெல்லூர் ரகம், டீலக்ஸ் நெல்லை போன்றே சன்ன ரகம். குலை நோய் தாக்குதல் குறைவு. ஒரு ஏக்கருக்கு 3,500 கிலோ வரை அதிக பட்ச மகசூல்கிடைக்கும், என எடுத்துரைக்கப்பட்டது.

விவசாயிகளும் கடந்த ஆண்டை போல் நஷ்டம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக மேற்கண்ட ரகங்களையே வேளாண்துறை அலுவலகங்களில் வாங்கி பயிரிட ஆரம்பித்துள்ளனர்.

**கருணை காட்டும் கருணை கிழங்கு**



மதுரை மாவட்டம் சோழவந்தான் பகுதியில் ஒரு போக நெல் சாகுபடி விவசாய நிலங்கள் அதிகம் உள்ளன. நெல் அறுவடை முடிந்த பின் விவசாயிகள் நிலத்தை காயவிட்டு விடுவர். பின் காய்கறி அல்லது கருணை கிழங்கு பயிர்களை போன்ற மானாவாரி பயிர்களை பயிரிட்டு கூடுதல் மகசூல் பெற்று வருகின்றனர். இந்த வரிசையில் மேலக்காலை சேர்ந்த முன்னோடி விவசாயி முருகேசன் கருணை

கிழங்கு சாகுபடியில் பல மடங்கு லாபம் ஈட்டி வருகிறார். அவர் நான்கு ஏக்கரில் ஆறு மாத பயிரான கருணை கிழங்கு பயிரிட்டுள்ளார். முதலில் நிலத்தை நன்றாக உழுது, பின் வயலில் அரை அடிக்கு தண்ணீர் தேக்கி, தழைச்சத்தாக ஊமத்தம் செடியை மிதித்து மட்க வைத்து, தொழு உரமாக குப்பை புழுதி ஒரு டன் இட்டு, ஆழ உழுது பரம்படிக்கும்போது அடியுரம் கிடைக்கிறது. நிலத்தை பண்படுத்தி மாற்று விவசாயம் செய்து வருகிறார்.

## 'பிரதமர் பயிர் காப்பீடு திட்டம்' விவசாயிகளுக்கு வரப்பிரசாதம்



தமிழகத்தில் மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம், கன்னியாகுமரி, திருச்சி, அரியலூர், கரூர், நாமக்கல், ஈரோடு, பெரம்பலூர், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் பிரதமர் பயிர் காப்பீடு திட்டம் 'ராபி - 2016' நெல் சம்பா பயிருக்கு முதன்மை பயிர் காப்பீடு நிறுவனமான 'அக்ரி கல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா' மூலம் வழங்குகிறது.

இம்மாவட்டங்களில் நெல் சம்பா சாகுபடி செய்யும் பயிர் கடன் பெறும் விவசாயிகளும், பயிர் கடன் பெறா விவசாயிகளும், இத்திட்டத்தில் 30.11.16 வரை சேரலாம்.

கடன் பெறும் விவசாயிகள் தங்களுடைய வங்கி மூலமாகவே இத்திட்டத்தில் கட்டாய அடிப்படையில் இணைக்கப்படுவர்.

பயிர் கடன் பெறா விவசாயிகள் தாங்கள் பயிர் செய்ததற்கான சான்றிதழினை கிராம நிர்வாக அலுவலரிடம் சிட்டா, அடங்கலுடன் இணைத்து முன்மொழிவு படிவத்தை பூர்த்தி செய்து பிரிமியத் தொகையை சேர்த்து தாங்கள் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வங்கியில் 30.11.16 தேதிக்குள் செலுத்த வேண்டும்.

பொன் முட்டையிடும் வாத்து



பால் சுரக்கும் மாடுகளுக்கு மடியில் சுரப்பு மிக அவசியம். கறவை நேரத்தில் மடி சுரக்கும் போது தான் முழுமையாக பால் உற்பத்தியை பெற முடியும். கறவை மாடுகளுக்கு மடியில் பால் சுரப்பு ஏற்பட 'ஆக்சிடோசின்' எனும் ஹார்மோன் தான் காரணம். ரத்தத்தில் ஆக்சிடோசின் சுரக்கும் போது தான் மடியில் சுரப்பு ஏற்படும். மூளையில் உள்ள 'பிட்யூட்டரி' எனும் நாளமில்லா சுரப்பி தான் இதனை சுரந்து ரத்தத்தில் கலந்து விடுகிறது.

தாய்ப்பசு கன்றை குறிப்பிட்ட நேரத்தில் பார்க்கும் போதும், கறவை நேரத்தில் மடியை கழுவி சுக்தம் செய்வதாலும், தாய்ப்பசு கன்றினை நாக்கால் நக்குவதாலும், கன்று தாயிடம் பால் குடிப்பதாலும் பிட்யூட்டரி சுரப்பி தூண்டப்பட்டு ரத்தத்தில் ஆக்சிடோசின் இயற்கையாக கலக்கிறது.

ஆக்சிடோசின் ரத்தத்தில் உற்பத்தியான நேரத்திலிருந்து ஒரு நிமிடம் முதல் மூன்று நிமிட நேரம் மட்டுமே இருக்கும்.

ஆக்சிடோசின் ஹார்மோன் மருந்து கடைகளில் செயற்கையாக கிடைக்கும். அதுவும் தற்போது மிகக் கட்டுப்பாட்டுடன், இம்மருந்து விற்கப்படுகிறது. இம்மருந்தினை கறவை மாடுகளில் இருந்து அதிக பால் பெறும் நோக்கத்துடன் கறவை மாடுகளுக்கு செயற்கையாக ஊசி மூலம் செலுத்தப்பட்டவுடன் மடியில் உள்ள திசுக்கள் செயலாற்றி பாலை வெளியேற்றுகிறது.

ஊசி போடுவதால் மடியில் தங்கி உள்ள சுமார் பத்து முதல் 15 சதவிகித பால் வெளியேறும்.

ஆனால் அடுத்த முறை பாலை கறக்கும் போது பாலின் உற்பத்தி அளவு குறையும். ஆக்சிடோசின் ஊசி போட்டு பெறப்படும் பாலில் கொழுப்புச்சத்து சிறிது கூடுதலாகவும் சர்க்கரைச்சத்து மற்றும் புரதச்சத்து குறைவாகவும் இருக்கும். ஆக்சிடோசின் செலுத்தி பெறப்படும் பால் இயற்கையாக கறக்கும் பாலிலிருந்து இவ்வாறு வேறுபடுகிறது.

ஆக்சிடோசின் செலுத்தி பாலைச் சுரக்க வைப்பதால் அடுத்த ஈத்தில் கிடைக்கும் பாலின் அளவு குறையும்.

ஆக்சிடோசின் செலுத்தி செயற்கையாகப் பாலைத் தரும் கறவை மாடுகளுக்கு சிறு நீரகக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆக்சிடோசின் ஹார்மோன் தொடர்ந்து செலுத்தினால் கறவை மாடுகள் இப்பழக்கத்துக்கு தம்மை அடிமையாக்கிக் கொள்ளும். இதனால் முழு அளவில் உற்பத்தி பாலை சுரக்காது. ஆக்சிடோசின் செலுத்தி பாலைக் கறப்பது என்பது பொன் முட்டையிடும் வாத்திலிருந்து அதிக முட்டைகளை உடனே பெற வேண்டும் என்ற பேராசைக்குச் சமமாகும். இப்பேராசையால் பெரு நஷ்டத்தினை தவிர்க்க இயற்கை சூழலை பால் கறவையின் போது உருவாக்க வேண்டும். தொடர்புக்கு 94864 69044.- **டாக்டர் வி.ராஜேந்திரன் ஓய்வு இணை இயக்குனர் கால்நடை பராமரிப்பு துறை.**

## வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்க மானியம் உண்டு



* அறுவடைக்கு பின் தேவைகளுக்கான திட்டத்தின் கீழ் வெங்காய சேமிப்பு கிடங்கு அமைக்க 50 சதவிகிதம் என 87 ஆயிரத்து 500 ரூபாய். சிப்பம் கட்டும் அறை (9 மீட்டர் நீளம் 6 மீட்டர் அகலம்) அமைக்க 50 சதவிகிதம் என இரண்டு லட்சம் ரூபாய்.

* மகசூல் அதிகரிப்பதற்கான திட்டத்தின் கீழ் தேனீ வளர்ப்புக்கும் மானியம் உண்டு. இதன்படி தேனீ காலனி மற்றும் தேனீ பெட்டி அமைக்க 40 சதவிகிதம் மானியம் என 1,600 ரூபாய், தேன் பிரித்தெடுக்கும் இயந்திரம் வாங்க 40 சதவிகிதம் என 8,000 ரூபாய்.

* விவசாய தேவைக்கு இயந்திரங்கள் வாங்க மானியம் வழங்கப்படுகிறது. டிராக்டர் (20 எச்.பி., வரை) 25 சதவிகிதம் என 75 ஆயிரம் ரூபாய். விசைத்தெளிப்பான் 40 சதவிகிதம் என 2,500 ரூபாய். கைத்தெளிப்பான் 40 சதவிகிதம் என 500 ரூபாய்.

* அங்கக பண்ணையம் அமைக்கும் திட்டத்தின் கீழ் மண்புழு உரக்கூடம் அமைக்க 50 சதவிகிதம் என 50 ஆயிரம் ரூபாய் வரை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் திட்டங்களுக்கு ஏற்ப மானியம் வழங்கப்படுகிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கொய்யா சீசன் தொடக்கம் கிலோ □60க்கு விற்பனை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கொய்யா சீசன் தொடங்கியுள்ளது. நேற்று ஒரு கிலோ □60க்கு விற்பனை செய்யப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தில் நாயக்கன்கொட்டாய், மொரப்பூர், செம்மண்ணஅள்ளி, கிருஷ்ணாபுரம், பொம்மிடி, பாலக்கோடு, பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் கொய்யா

சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது மாவட்டத்தில் கொய்யா சீசன் துவங்கியுள்ளது.

## மலைபூண்டு வரத்து குறைந்ததால் கிலோ ரூ.220 ஆக விலை உயர்வு

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு மலை பூண்டு வரத்து குறைந்ததால், ஒரு கிலோ ரூ.220 ஆக விலை உயர்ந்துள்ளது.

பொள்ளாச்சி மார்க்கெட்டுகளுக்கு உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து காய்கறிகள் வரத்து அதிகளவில் காணப்பட்டாலும், பெல்லாரி மற்றும் பூண்டு வெளியிடங்களில் இருந்து அதிகம் கொண்டு வரப்படுகிறது.இதில், கர்நாடகா, தமிழகத்தில் ராஜபாளையம், தேனி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு பூண்டு டன் கணக்கில் கொண்டு வரப்படுகிறது. இதை உள்ளூர், கேரள வியாபாரிகள் மொத்தமாக வாங்கி செல்கின்றனர். மலை பூண்டு, நாட்டு பூண்டு என தரம் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதில் கடந்த ஒரு மாதம் வரையிலும், பூண்டு வரத்து அதிகரிப்பால் கிலோ ரூ.100 முதல் ரூ.130 வரை என குறைந்த விலைக்கு போனது.தற்போது, தேனி மற்றும் ராஜபாளையம் உள்ளிட்ட பகுதியில் மலைப்பூண்டு அறுவடை குறைந்துள்ளது. இதனால், கடந்த சில வாரமாக பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வரத்து மிகவும் குறைந்து விட்டது.கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு மார்க்கெட்டுக்கு தினமும் 7 டன் பூண்டு விற்னைக்கு வந்தது. தற்போது மூன்றரை டன்னாக குறைந்து விட்டது. இதனால் மலை பூண்டு ஒரு கிலோ ரூ.200 முதல் 220 வரை விற்பனை செய்யப்படுகிறது.

பாப்பிரெட்டிப்பட்டி, மொரப்பூர் பகுதியில் விளைந்த கொய்யாவை வியாபாரிகள் பறிக்க தொடங்கியுள்ளனர்.

தர்மபுரி ஆறுமுகஆசாரி தெரு, சின்னசாமி நாயுடு தெரு, பென்னாகரம் ரோடு, பழைய பஸ் ஸ்டாண்ட், புதிய பஸ் ஸ்டாண்டை சுற்றியுள்ள பகுதியில் தள்ளுவண்டியில் கொய்யா விற்பனை செய்து வருகின்றனர். ஒரு கிலோ ☐60க்கு விற்பனை செய்யப்படுகிறது. தரம் பிரித்த ஒரு காய் ☐5, ☐10 என விற்பனை

செய்யப்படுகிறது.

கொய்யாவில் அதிக சத்து இருப்பதால், பொதுமக்கள் விலையை பொருட்படுத்தாமல் விரும்பி வாங்கி செல்கின்றனர்.

இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், ‘நடப்பாண்டில் போதிய பருவ மழை இல்லாததால், கொய்யா விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட நடப்பாண்டு கிலோவுக்கு □20 உயர்ந்துள்ளது. இன்னும் 10 நாளில் கொய்யா அறுவடை அதிகரிக்கும். அதன்பின் விலை சரிய வாய்ப்பு உள்ளது’ என்றனர்.